

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 143 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 18 – வெள்ளிக்கிழமை 02 ஜனவரி 2026 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 143: Thiruvalluvar Year - 2056 - Margazhi 18 - Friday 02 January 2026 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## அமைதி, நல்லிணக்கம், மகிழ்ச்சி நிரம்பி

# புதிய வெற்றிகள் நிறைந்த ஆண்டாக அமையட்டும் 2026!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஜன. 2-

**“அமைதி, நல்லிணக்கம், மகிழ்ச்சி நிரம்பி புதிய வெற்றிகள் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அமையட்டும்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆங்கிலப் புத்தாண்டையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

பல வகைகளிலும் தமிழ்நாட்டுக்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்த 2025க்கு விடைகொடுத்து, இதுவரை காணாத மாபெரும் வெற்றியை வழங்கவுள்ள 2026இல் அடியெடுத்து வைக்கத் தயாராகிறோம்!

தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் எழுச்சிக்கும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் மிகச் சிறந்த ஆண்டாக 2025 அமைந்தது என்றால் மிகையாகாது. பொருளாதார வளர்ச்சியிலும் GSDP வளர்ச்சியிலும் முதலிடம் என நமக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் 2030க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் நம் கனவுக்கு வலுவூட்டுகிறது.

மகளிர், உழவர், மாணவர், மாற்றுத்திறனாளிகள், மீனவர், வணிகர், நெசவாளர், விளிம்புநிலை மக்கள், தொழில் முனைவோர், விளையாட்டு வீரர்கள் என அனைத்துத் தரப்பினரின் மனங்களையும் மகிழ்விக்கும் திட்டங்கள் நிறைந்த ஆண்டாக 2025 அமைந்தது. வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டமும், இதுவரை இல்லாத அளவுக்குப் பட்டாக்களை வழங்கி நிலம் எனும் அதிகாரத்தை எளியோருக்கு வழங்கியதும் நமது திராவிட மாடல் அரசில் முன்னுரிமை யாருக்கு என்பதற்குச் சான்றாக அமைந்தன.

**உலகத்துக்குப் பறைசாற்றிய 2025!**

‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்களால் மக்களின் தேவைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன, ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம்களால் உயர்தரச் சிறப்பு மருத்துவச் சேவைகள் மக்களுக்குக் கிடைத்து வருகின்றன. கல்வியில் சிறந்த தமிழ்நாடு, வெல்லும் தமிழ்ப் பெண்கள் என 2025இல் தலைநிமிர்ந்துள்ளோம்! காலை உணவுத் திட்டமும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமும் பெருமளவில் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலான, சமத்துவமான வளர்ச்சியும் சாத்தியமாகி வருகிறது.

தொகுதி மறுசீரமைப்பு ஆபத்தை எதிர்த்து அகில இந்திய அளவில் அணிதிரட்டல், சிறப்புத் தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் சூழ்ச்சியில் இருந்து நம் மக்களின் வாக்குரிமையைக் காப்பது, மாநில சுயாட்சிக்காக உயர்நிலைக் குழு அமைத்தது, மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டது, கல்வி நிதிக்காக ஒன்றிய அரசிடம் உரிமைக்குரலை எழுப்பியது, ஆளுநரின் அதிகார மீறலுக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சநீதிமன்றத் தீர்ப்பினைப் பெற்றது என வழக்கம் போல இந்த ஆண்டும் மாநில உரிமைகளுக்கான நமது போராட்டங்களுக்கும் குறைவே இல்லை.

**மொத்தத்தில் தமிழ்நாடு யாருக்கும் தலைகுனியாது, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என உலகத்துக்குப் பறைசாற்றிய ஆண்டுதான் 2025!**

நாம் இதுவரை பெற்ற வெற்றிகள் தந்த ஊக்கத்தோடும், போராட்டங்களால் பெற்ற துணிவோடும் 2026இல் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம்! நாம் என்றால் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் அனைவரும் பெறப் போகும் வெற்றியைத்தான் குறிப்பிடுகிறேன். அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அனைவருக்கும் அமைந்திட எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## 2.22 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு

# பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி ஒதுக்கீடு!

## தமிழ்நாடு அரசு - அரசாணை வெளியீடு!



சென்னை, ஜன.1-

பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. முழு கரும்புக்கு தோராயமாக ரூ.38 வீதம் செலவினம், வெட்டுக் கூலி உள்பட கொள்முதல் செய்ய அரசாணை வெளியிடப் பட்டுள்ளது.

இதன் மூலம் சுமார் 2.22 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறுவர்.

ஜனவரி 10-ஆம் தேதிக்குள் பொங்கல் தொகுப்பு மற்றும் பரிசுத் தொகையை தமிழ்நாடு முழுக்க விநியோகம் செய்து முடிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு சார்பில் திட்டமிடப்பட்டுள்ளது.

எப்போதும் போலவே டோக்கன் முறையில் பொங்கல் பரிசுத் தொகுப்பை விநியோகிக்க தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ளது. ‘தாயுமானவர்’ திட்டத்தின் மூலம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வீடு தேடி வர உள்ளது.

ஜனவரி மாதத்திற்கான மகளிர் உரிமைத் தொகையையும் பொங்கல் பண்டிகைக்கு முன்னரே பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# தமிழ்நாட்டின் சுயமரியாதையை நிலைநாட்டும் ஆண்டாக 2026 மலரட்டும்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**அன்புடையீர் வணக்கம்!**

கழக உடன் பிறப்புகளுக்கும் - ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் என்னுடைய இனிய புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறக்கின்ற 2026-ஐ நாம் அனைவரும் நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும் வரவேற்று மகிழ்வோம்.

தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு, பிளவுவாத சக்திகளுக்கு நம்முடைய ஒற்றுமையின் வலிமையைக் காண்பித்த ஆண்டாக 2025 அமைந்திருந்தது.

ஏதாவது செய்து, உணர்ச்சிகளைத் தூண்டி மக்களைக் கூறுபோடலாம் என முயன்றவர்கள், முனை முறிந்து நின்ற காட்சி தான் கடந்த ஆண்டின் சிறப்பு!

மும்மொழிக் கொள்கைத் திணிப்பு, தொகுதி மறுவரையறை, நிதிப் பங்கீட்டில் பாரபட்சம், கீழடிக்கு அங்கீகாரம் மறுப்பு, ஆளுநரின் அடாவடி, எஸ்.ஐ.ஆர் என ஒன்றிய அரசின் எல்லா அதிகார அத்துமீறல்களையும் ஓரணியில் எதிர்த்து

2025-இல் தமிழ்நாடு வரலாறு படைத்திருக்கிறது.

ஒன்றிய அரசின் அடக்குமுறைகளுக்கு இடையே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அனைத்துத் துறைகளிலும் உச்சம் தொட்டது. குறிப்பாக, 11.19 சதவிகிதத்துடன் நாட்டிலேயே இரட்டை இலக்க வளர்ச்சியைக் கண்ட ஒரே மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்தது.

கல்வி வளர்ச்சித்திட்டங்கள், மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் தொழில் முதலீடுகள், உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகள் நியமனம் என நாம் அடைந்துள்ள உயரங்களை ஒட்டுமொத்த இந்தியாவும் பாராட்டுகிறது.

விளையாட்டுத்துறையை பொறுத்தவரை, ஏராளமான சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை, தமிழ்நாட்டில் நடத்தினோம். தமிழ்நாட்டு வீரர்கள் பலர் உலகெங்கும் பதக்கங்களைக் குவித்து பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும், நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயனடைந்தோர் ஒருவராவது இருக்கிறார் என்பதையும், 2025 உறுதிப்படுத்தி இருக்கிறது.

கழக இளைஞர் அணியை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டின் வார்டு, கிளை மற்றும் பூத் வரை நிர்வாகிகளை நியமிக்கும் பணியைத் தொடங்கினோம்.

உலகில் ஈடு இணையில்லாத வகையில், 5 இலட்சம் நிர்வாகிகள்,

50 இலட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் என கருப்பு - சிவப்பு ராணுவமாக இளைஞர் அணியை கட்டமைத்து வருகிறோம்.

‘அறிவுத் திருவிழா’ எனும் ஆற்றல்மிகு நிகழ்வை இளைஞர் அணி முன்னெடுத்தது.

சமீபத்தில், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கவனத்தை ஈர்க்கும் வகையில், திருவண்ணாமலையில் வடக்கு மண்டல கழக இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பை வெற்றிகரமாக நடத்தினோம்.



75 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் நம் கழகம், இன்றைக்கும் இளமைத் துடிப்போடு இருக்கிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சிகளே சாட்சி.

இப்படி, எண்ணற்ற ஆக்கப்பூர்வமான பணிகளை 2025-இல் நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

மலரப்போகும் 2026ஆம் ஆண்டில், இந்தப் பணிகளை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்வதே நம் இலக்கு.

இன்னும் சில மாதங்களில், சட்டமன்றத் தேர்தல் வரவிருக்கிறது. இந்தத் தேர்தல் என்பது, தமிழ்நாட்டின் ‘உரிமைகளைக்’ காப்பதற்கான தேர்தல் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் பாதுகாப்பதற்கான தேர்தல்.

குறிப்பாக, அண்மையில் வெளியான வரைவு வாக்காளர் பட்டியலில், பெயர் விடுபட்டுப்போன வாக்காளர்கள், கழகத்தின் BLA-2 நிர்வாகிகள் மூலம் மீண்டும் விண்ணப்பம் அளிப்பது மிக மிக அவசியம்.

இதற்கான பணிகளை ஜனவரி 18-வரை மேற்கொள்ளலாம் என்பதால், விழிப்போடு இருந்து ஒவ்வொருவரும் தங்களுடைய வாக்குரிமையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டுக்குள் மதம்பிடித்து ஓடி வரத்துடிக்கும் பாசிச சக்திகளையும், அவர்களுக்குப் பாதைப் போட்டுக் கொடுக்கும் பழைய - புதிய அடிமைகளையும் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வீழ்த்த வேண்டும். இது தி.மு.கழகத்தின் பொறுப்பு மட்டுமல்ல, ஒட்டு மொத்த தமிழ்நாட்டின் கடமை.

திராவிட மாடல் 2.0 ஆட்சியில் புதிய திட்டங்களும், மாநில உரிமைக்கான குரலும் புதுவேகத்துடன் பெருகும்! இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகளுடன் போட்டியிடும் வளர்ச்சியை தமிழ்நாடு எட்டும்!

ஏழாவது முறையாக கழக ஆட்சி அமைந்திட - ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்ற உரிமைக்குரல் 2026-இல் மீண்டும் ஓங்கி ஒலித்திட நாம் அனைவரும் உறுதியேற்போம்.

***தமிழ்நாட்டின் அடையாளத்தையும் - சுயமரியாதையையும் நிலைநாட்டும் ஆண்டாக 2026 மலரட்டும்!***

***புத்தாண்டில் அனைவரின் வாழ்வும் சிறக்கட்டும் - செழிக்கட்டும்!!***

**உங்கள்**

**உதயநிதி ஸ்டாலின்**